**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை**
**வட்டாட்சியர் அலுவலகம், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்**

அறிக்கை எண்.அ1/2595/2025 நாள்: 07.10.2025.

## அறிவிக்கை

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டத்தில் காலியாக உள்ள (01) ஒன்று கிராம உதவியாளர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் செய்வதற்காக இவ்வலுவலக அறிவிக்கை எண் அ1/2595/2025, நாள்:08.08.2025 ன் படி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்நேர்வில் தற்போது அதிகபட்ச வயது வரம்பு தளர்வு செய்து தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.(குறிப்பு: இவ்வலுவலக அறிவிக்கை எண் அ1/2595/2025, நாள்:08.08.2025 ன் படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் தற்போது விண்ணப்பிக்கத் தேவையில்லை)

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | 07.10.2025 |
| விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 21.10.2025 |
| வாசித்தல் மற்றும் எழுதும் திறனறித் தேர்வு | 21.11.2025 |
| நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் | 05.12.2025 |
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| பணி விதிகள் | தமிழ்நாடு கிராம உதவியாளர் பணி விதிகள் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் (ரூ.11,100/- - 35,100/-) |
| வட்டத்தின் பெயர் | இராமேஸ்வரம் |
| நிரப்பப்பட உள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | 01 |

| வ.எண் | நிரப்பப்பட உள்ள கிராமத்தின் பெயர் | இன சுழற்சி எண் | இனசுழற்சி விபரம் |
|---|---|---|---|
| 01 | பாம்பன் | 02 | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) பெண், ஆதரவற்ற விதவை, முன்னுரிமைப் பெற்றவர் |

**கல்வித்தகுதி:**

தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழ் தேர்வில் (SSLC - Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும்.(தேர்ச்சி/தோல்வி) குறிப்பு: (SSLC -Secondary School Leaving Certificate Examination)மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

வயது வரம்பு : 01.07.2025 அன்று

| வ.எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1. | இதர பிரிவினர்/பொதுப் பிரிவினர் | 21 | 32 |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர்/பிற்பட்ட வகுப்பினர்/பிற்பட்ட வகுப்பினர்(முஸ்லீம்) | 21 | 39 |
| 3. | அட்டவணை வகுப்பினர்/ அட்டவணை வகுப்பினர்(அருந்ததியினர்)/பழங்குடியினர்/ஆதரவற்ற விதவை (எந்தப் பிரிவினராக இருந்தாலும்) | 21 | 42 |

குறிப்பு: I) மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகபட்ச வயது வரம்பு 10 ஆண்டுகள் கூடுதல் தளர்வு வழங்கப்படும்.

II) முன்னாள் இராணுவ பொதுப் பிரிவினருக்கு அதிகபட்சமாக 50 வயதும் , இதர பிரிவினருக்கு 55 வயதும் வழங்கப்படும்.

<u>இதர தகுதிகள்:</u>

- ❖ விண்ணப்பதாரர்கள் இராமேஸ்வரம் வட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- ❖ தமிழில் பிழையின்றி எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.
- ❖ கிராம உதவியாளர்கள் நியமனம் தொடர்பாக, அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.312, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி 8(1) ) துறை, நாள்:04.06.2025-ல் தெரிவிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய கல்வித்தகுதி, மிதிவண்டி/இரு சக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன், வசிப்பிடம் (Native Resident) நேர்காணல் ஆகியவற்றிற்கு தனித்தனியே மதிப்பெண்கள் வழங்கப்பட்டு ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் தரவரிசைப்பட்டியல் தயார் செய்யப்பட்டு காலிப்பணியிடங்களுக்கு பணிநியமனம் செய்யப்படும்.
- ❖ இருசக்கர மோட்டார் வாகன ஓட்டுனர் உரிமம் வைத்திருப்பின் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியாக தேர்வு நடத்தப்படமாட்டாது. மாறாக இருசக்கர வாகன ஓட்டுனர் உரிமம் இல்லை எனில் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியே தேர்வு நடத்தப்படும்.
- ❖ பணி நியமனத்தின்போது உடல் தகுதிச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ இருதார மனைவி உடையவர்களாக இருக்கக் கூடாது மற்றும் வேறு கணவர் மனைவி உயிருடன் உள்ள ஒருவரை திருமணம் செய்திருக்கக் கூடாது.
- ❖ பரிசீலனையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- ❖ நேர்முகத் தேர்வின் போதும் சான்றுகள் சரிபார்ப்பின் போதும் அசல் சான்றுகள்/ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை https://ramanathapuram.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமீபத்திய புகைப்படத்தினை (கடவுச் சீட்டு அளவு) விண்ணப்பத்தில் ஒட்டி உரிய ஆவணங்களுடன் இராமேஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கடைசி நாளான 21.10.2025 அன்று மாலை 05:45 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.

வட்டாட்சியர்,
இராமேஸ்வரம்.